ஓம்

சத்குருபாதம்

சத்குரு தரிசனம்

ஆசிரியர் :

ஞானபூபதி

சாது தண்டபாணி

பட்டுக்கோட்டை.

வெளியீடு :

ஸ்ரீ ஞானனந்த தபோவனம்

தபோவனம் அஞ்சல்

அரகண்டநல்லூர் வழி தென் ஆற்காடு மாவட்டம்

 1974 [விலை ரூ. 0—60

அருள் மொழிகள்

சுறுசுறுப்பாயிரு - ஆனல்– படபடப்பாயிராதே!
பொறுமையாயிரு - ,, - சோம்பலாயிராதே!
சிக்கனமாயிரு - ,, - கருமியாயிராதே!
அன்பாயிரு - ,, - அடிமையாயிராதே!
இரக்கம் காட்டு - ,, -ஏமாந்து போகாதே!
கொடையாளியாயிரு - ,, -ஒட்டாண்டியாகாதே!
வீரனுகயிரு - ,, -போக்கிரியாயிராதே!
இல்லறத்தைநடத்து - ,, காமவெறியனுயிராதே!
பற்றற்றிரு - ,, - காட்டுக்குப் போய் விடாதே!
நல்லோரை நாடு - ,, - அல்லோரை வெறுக்காதே!

குரு கீதை

(1) குருவே பிரம்மா! குருவே விஷ்ணு! குருவே மகாதேவனுகிய தேவன்! குருவே ஏகமாகிய பரப்பிரம்மம்! அத்தன்மைய ஸ்ரீகுருவிற்கு நமஸ்காரம்!! (558)

(2) குருவிலும் மேலான தத்துவமில்லை! குருவிலும் மேலான தவமில்லை! அத்தன்மைய ஸ்ரீகுருவிற்கு நமஸ்காரம்!! (57)

(3) தியானத்திற்கு மூலம் குருவடிவம்! பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள்! மந்திரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம்! முத்திக்கு மூலம் குருவின் கிருபை (586)

ஓம்

சத்குருபாதம்

சத்குரு தரிசனம்

ஆசிரியர் :

ஞானபூபதி

சாது தண்டபாணி

[P. S. தண்டபாணி செட்டியார்]

பட்டுக்கோட்டை.

சித்ராபௌர்ணமி வெளியீடு

ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

தபோவனம் அஞ்சல்

அரகண்டநல்லூர் வழி தென் ஆற்காடு மாவட்டம்

காபிரைட்] 1974 விலை ரூ. 0—60

குரு அருள்

" கல்வியெலாம் கற்பித்தாய்-நின்பால் நேயங்
காணவைத்தாய்-இவ்வுலகம் கானலென்று
ஒல்லும் வகை அறிவித்தாய்-உள்ளேநின்றென்
உடையானே நின்னருளும் உதவுகின்றாய்.
இல்லையெனப் பிறர்பாற் சென்றிரவா வண்ணம்
ஏற்றமளித்தா யிரக்கம் என்னே! என்னே!
செல்வ அருட் குருவாகி-நாயினேனை
சிறுகாலை யாட்கொண்ட தேவதேவே !!

—ஸ்ரீ ராமலிங்க அடிகள்

52-2

ஓம்

சத்குருபாதம்

முகவுரை

சத்குரு தேவர் ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகள் அவர்களின் திருவருட் பெருங் கருணையினால் - இவ்வருடம் சித்ராபௌர்ணமியன்று - சத்குரு தேவரவர்களின் ஞானப் பிதாவாகிய ஸ்ரீசிவரத்னகிரி சுவாமிகள் அவர்களின் குரு பூஜை நடக்கும் தருணத்தில் - இச்சிறு நூல் வெளி வருகின்றது !!

"தெய்வ பக்தியை வளர்ப்பது, ஆன்மீக ஞானத்தைப் பரப்புவது, அவ்வகைகளில் ஆர்வமுடையோருக்கு வழி காட்டுவது, மற்றும் மக்கட்பணி, தெய்வப்பணி ஆகிய காரியங் களுக்கு இயன்றவரை உதவுவது", முதலிய துறைகளிலே அடியேன் தொண்டாற்ற வேண்டுமென்பது குரு தேவரின் கட்டளை! அதனைச் சிரமேற்கொண்டு, குரு அருள் துணையால் முடிந்த அளவுக்கு அடியேன் அக்கடமையைச் செய்து வருகின் றேன்! அதில் ஒரு பகுதியே இத்தகைய பிரசுரங்கள் வெளியிடு வதுமாகும்! அன்பர்களின் ஆதரவையும் ஒத்துழைப் பையும் கொண்டு, எனது பணிகளை மேலும் தீவிரமாகவும்- வெற்றிகரமாகவும் செய்துவரத் திருவருள் துணைநிற்குமாக!!

மேற்சொன்ன கடமைகளைச் சீரிய முறையில் செய்வதற் கனுகூலமாக - அடியேனது வருவாய்களில் ஒரு பகுதியைக் கொண்டும், மற்றும் பல அன்பர்கள், மாணவர்கள் ஆகியோர் அப்போதைக்கப்போது மனமுவந்து கொடுக்கும் நன்கொடை கள், காணிக்கைகள் ஆகியவைகளைக் கொண்டும், அடியேன் சுவாமிகளது பெயரால் சேர்த்துவரும் - **ஸ்ரீ ஞானசத்குரு தருமநிதி** என்ற நிதியிலிருந்து பொருளுதவி பெற்று இந் நூல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது !!

சத்குரு தரிசன விசேடத்தைப் பற்றியும், அதனாலேற்படக் கூடிய பெரும் பயன்களைப் பற்றியும் ஓரளவு இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளது! அன்பர்கள் இதனைப் படித்து நற்பயனடைய முயற்சிப்பார்கள் என்று கருதுகின்றேன்! குரு அருள்-அதற்கு உதவி செய்யுமாக !!

இதனையும் - "தபோவனம் வெளியீடாகவே" பிரசுரித்து - "அடக்கவிலைக்கு" அன்பர்களுக்கு வினியோகிக்க "தபோவனம் நிருவாகத்தினர்" மூலமாகவே ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது! இந்நூற் பிரதிகளின் விற்பனைத் தொகை பூராவும் - தபோவனத்திற்கே சேரும் !!

இந்நூலில் குற்றம் குறைகள் ஏதேனும் காணப்படுமானால் அறிஞர்கள் அவற்றைப் பொறுத்தருளி அடியேனை மன்னிக்குமாறு வேண்டுகின்றேன் !!

30-3-1974
பட்டுக்கோட்டை.

ஸ்ரீ ஞானசத்குருபாதசேகர
ப. சு. தண்டபாணி



ஓம்

சத்குருபாதம்

சத்குரு தரிசனம்

(பாடல்கள்)

---

1. கடவுள் வணக்கம்

(செய்யுள்)

1. ''வேதத்தின் உட்பொருளாய் விளங்குகின்ற
பேறிவே — விரிந்தஞான
போதத்தினுறுபயனேபுலன் பொறிகள் கடந்துநின்ற
புதுமையே — நந்
நாதத்தில் இணைந்தெழுந்த நல்லுணர்வே
"நான்" — "நீ"'என்று
சூதற்றுப் போனவிடம் தோன்றுகின்ற ஜோதியே
துரியவாழ்வே!''

2. குரு வணக்கம்

(செய்யுள்)

''திருவடி எந்தன் சென்னியில் வைத்துக்
கருவழியடைக்கக் கண்களால் நோக்கி
அருள் புரிந்தென்னை - ஆட்கொண்ட ஞான
குருவடிபோற்றிக் கொண்டாடுவேனே''

3. சத்குருதரிசனம்

(கண்ணிகள்)

1. கந்தனே குருவாகி வந்தெனக்குக்
கருணை புரிந்தானடி — தோழி
கருணை புரிந்தானடி —

2. தொந்த வினைகளை நீக்கித்தடுத்தாண்டு
சுகவாழ்வு தந்தானடி — தோழி
சுகவாழ்வு தந்தானடி —
— (கந்தனே)

3. நீலச்சி கண்டியிலேறும் பிரானென்தன்
நினைப்பிலிருப்பானடி — தோழி
நினைப்பிலிருப்பானடி —

4. ஞாலத்திலே — ஞான சத்குருவாய் வந்து
நன்மைகள் செய்தானடி — தோழி
நன்மைகள் செய்தானடி — (கந்தனே)

5. வானோர் புகழ்சித்தலிங்கமடமதில்
வந்து இருந்தானடி — தோழி
வந்து இருந்தானடி —

6. ஞான ஆனந்த சத்குருவாகியே
நல்லருள் செய்தானடி — தோழி
நல்லருள் செய்தானடி — (கந்தனே)

7. கோவல் தபோவனம் தன்னிலிருந்தங்கு
கோவிலும் கொண்டானடி — தோழி
கோவிலும் கொண்டானடி —

8. ஆவல் கொண்ட என்னை ஆட்கொண்டு மேல்நிலை
அளித்து ரக்ஷித்தானடி — தோழி
அளித்து ரக்ஷித்தானடி — (கந்தனே)

9. அன்பர்பணி செய்து — அருளாலறிந்திட
ஆணையும் தந்தானடி — தோழி
ஆணையும் தந்தானடி —

10. இன்பநிலை பெற — ஈதன்றி வழி வேறு
இலை என்று சொன்னானடி — தோழி
இலை என்று சொன்னானடி — (கந்தனே)

உரிமையுரை
(செய்யுள்)

"அவமாயைப்பட்டுழலும் அடியேனைத்தடுத்தாண்டு
அருள்பாலித்து
சிவஞான அருள்நெறியைத் தெளிவுபெறக்காட்டி
எனைப்புரந்த செம்மல்
தவயோக ஞானஆனந்தகுரு நாதரவர்
சரணங்கட்கே
நவமாகசத்குரு தரிசனமிந்நூல்தனையுரிமை
யாக்குவேனே"

ஓம்
சத்குரு பாதம்

சத்குரு தரிசனம்

" குருவேசிவமெனக் கூறினன் நந்தி
குருவேசிவமென்பது குறித்தோரார்
குருவேசிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவேயுரையுணர்வற்ற தோர்கோவே "

— திருமந்திரம்

(1)

"குருவே இறைவன் " — என்பதுதான் மேற் சொன்ன திரு மந்திரப் பாடலின் திரண்ட பொருள்! எனினும் - குருவே இறைபரம் பொருள்ாகிய சிவபெருமான் என்பதைப் பலரும் அறிந்து - உணர மாட்டார்கள் ! குருவே - சிவனுகவும் நமது தலைவனுகவுமிருப்பதோடு மட்டுமில்லாமல் - வாக்குக்கும், உணர்வுக்கும் எட்டாதவராகவும் அவர் இருப்பார்!! குருவின் மகத்துவம் - அத்தகைய பெருமை வாய்ந்ததாகும்!! இதுவே– மேற்சொன்ன பாடலின் பொதுப் படையான கருத்து .

குருபெருமானுக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை! அவருக்கு எல்லா வல்லமைகளுமுண்டு ! இயற்கைக்கு அதீதமான காரியங்களையும் குரு செய்தல் கூடும்! ஆகவே குருபிரானை - நாம் இறைபரம் பொருளாகவே கருதி வணங்குதல் வேண்டும் ! அவ்வாறே வணங்குவோமாக !!

தபோவனத்தில் - கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் நமது ஞான சத்குரு தேவரவர்களை - தபோவனம் வரக்

கூடிய அடியவர்கள் "பரம் பொருளாகவே" கருதி வணங்கிப் போற்றி - அதன் மூலமாகப் பல நலன்களையும் பெற்றிருப் பதை நாம் யாவரும் அறிவோம்!! இனியும் அவ்வாறே நாம் போற்றி நலம் பெறுவோமாக !!

(2)

ஞான சத்குரு மூர்த்தியவர்களை தரிசித்து வழிபடக் கூடிய பாக்கியம் அடியேனுக்கு இற்றைக்குச் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே கிட்டியது! நண்பர் ஒருவர் மூலம் இவர்களைப் பற்றிய விவரம் தெரிந்து கொண்ட அடியவன், இவர்களை சித்தலிங்கமடம் ஆசிரமத்தில் முதன் முதலாகத் தரிசித்தேன் ! அதுமுதற் கொண்டு - அவர்களது கிருபா நோக்கத்தால் கவரப்பட்டு இன்றளவும் அவர்களை மனமொழி மெய்களால் வணங்கிப் போற்றி வழிபட்டு வருகின்றேன் ! இனியும் - அவ்வாறு வழிபட்டு நற் பயன் பெறுவேன் !!

அடியேனது வாழ்க்கையிலே பெரும் புயலேற்பட்டு பல் விதமான கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகி - மன அமைதியை யிழந்து உழன்ற காலத்திலேதான், சத்குரு தேவர் அவர்களை அடியேன் சந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது! அடியேனது - " அலைபட்டமனம் " அப்போது அமைதியை வேண்டித் தவித்தது என்றே சொல்ல வேண்டும் "

" மனத்திலே சாந்தியில்லாத போது - வாழக்கையிலே சௌக் கியமிராது என்று தியாகப் பிரம்மம் அவர்கள் தமது கீர்த்தனை ஒன்றிலே கூறியிருக்கின்றார்!!

அமைதியை வேண்டிய அடியவன் - பலதலங்களுக்கும் சென்றேன் ! பல பெரியவர்களையும் சந்தித்தேன் ! காலம் ஓடிக் கொண்டிருந்ததே தவிற - அடியேனுக்கு மனச்சாந்தி கிட்டவில்லை !!

இளம்பிராயம் முதலாகவே – அடியவன் முருகப் பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டு வணங்கிப் போற்றி வழிபட்டு வருபவன் ! ஆதலினாலே - முருகனின் "ஆறுபடை வீடுகள்" என்றுசொல்லப்பட்ட ஆறுஸ்தலங்களுக்கும் சென்று - ஆறு முகப் பெருமானை வணங்கி வழிபட்டேன் ! ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒவ்வொரு பாடலாக ' ஆறு பாடல்களைப் பாடி ' அந்தப் பெருமானுக்கு அர்ப்பணித்தேன்! அவற்றிலே – திருச்செந்தூரிலே அக்காலத்திலே அடியேன் பாடியபாடலைக் கீழே தருகின்றேன். அதனைக் கவனித்தால் - அடியேனுடைய "அப்போதைய மனோ நிலை" அன்பர்களுக்கு நன்கு விளங்கும்.

" மலை எனத்துன்பமெல்லாம் - வந்தெனை வளைத்துக்
கொண்டு
குலதனை நடுங்க வைக்கும்-கொடுமையைத்தவிர்த்து
இந்நாள்
நிலை பெறும் சாந்த வாழ்க்கை நீ எனக் களித்துக்
காப்பாய்
அலைகடல் சூழ் செந்தூரில் - அமர்ந்திடும்
கந்தவேளே "

இவ்வாறு வேண்டி நின்றதற்குச் சில ஆண்டுகள் சென்ற பின்னரே, முருகப்பெருமாளின் திருவருட்கருணையினால் - அடியேனுக்கு மனச் சாந்தி கிட்டியது ! அந்த மனச் சாந்தியை அடியேனுக்குக் கொடுத்தவர்கள், நமது சத்குரு தேவராகிய ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் அவர்களே ஆவார்கள்!! எனவே - முருகனே ஞானசத்குருவாக வந்து அருள் புரிந்து - என் மனத்தில் அமைதியை நிலைநாட்டினார் என்று அடியேன் கருதுகின்றேன் ! அது மட்டுமல்ல பூரணமாக நம்புகின்றேன் !!

(3)

ஆதலினால் தான் — " கந்தனே குருவாக வந்தெனக்குக் கருணை புரிந்தானடி " என்ற முகப்பில் கண்டபாடலையும் பாடி யிருக்கிறேன்! " முருகன் ஞான உருவானவன் " என்பது ஆன்றோர் கருத்து! " ஞானஸ்கந்தன் " என்றும், " ஞான குருபரன் " என்றும் " ஞானபண்டிதன் " என்றும் " முருகனைச் சிறப்பித்துக் கூறுவது மரபு! என்று மிளையானாகிய அப்பெரு மானே தான், மனித உருத்தாங்கி, " ஞானசத்குருவாக வந்து " அடியேனுக்கு நல்லருள் செய்து மனச் சாந்தியளித்தார் என்று அடியேன் நம்புகின்றேன்! அவ்வாறு கூறுவதில் - தத்துவரீதியாகவும் தவறில்லை!!

குருவே - இறைவன் என்று கூறப்படும்பொழுது எனது உபாசனாமூர்த்தியாகிய கந்தப்பெருமானே, ஞான சத்குருவாக வந்து அடியேனுக்கு அருள் செய்தார் என்று அடியேன் நம்புவது பிழையாக மாட்டாது! நமது சத்குருதேவரவர் களின் பூர்வாசிரமப் பெயரும் — " சுப்பிரமணியம் " என்பது இங்கு குறிப்பிடத்தக்கது!

ஆரம்ப முதலாகவே - அடியேன் சத்குருதேவரவர் களிடம் எந்த விதமான " இலௌகீக ஆதாயத்தையும் " விரும்பி வேண்டிக்கொள்ளவில்லை! அடியேனுக்கு " மன அமைதியைக் கொடுத்து - மெய்யறிவு அளிக்கவேண்டுமென்றே " பிரார்த்தித்து வந்தேன்!! அடிக்கடி சுவாமிகளை தரிசித்து அடியேனது கோரிக்கையைத் தெரிவித்து வந்தேன்! பின்னர் சில காலம் சென்று - (அடியேனது பூர்வபுண்ணிய வசத்தினா லென்று நினைக்கின்றேன்) சுவாமிகள் அடியேன் மீது பெருங் கருணை கொண்டு - ஓர் மகாமகதினத்தன்று இரவு சித்தலிங்க மடம் ஆசிரமத்திலே, அடியேனைத் தடுத்தாட்கொண்டு நல்லருள் புரிந்து " அருள் வழியிலே " நிலைநிருத்தினார்கள்

அடியேனும் – தன்யனானேன் ! அதன் விளைவாக மனத்திலே சாந்தியும், அறிவிலே ஒரு அளவு தெளிவும், அடியேனுக்கு நாளடைவில் ஏற்படலாயிற்று !!

இந்த சந்தர்ப்பத்திலே — நமது குருதேவர் அவர்களின் " அருள் மொழி " ஒன்றையும் இங்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன். தபோவனத்திலுள்ள – ஸ்ரீ நாராயண பவனத்தில் '' அடியேன் சில ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமிகளை தரிசித்து வணங்கினேன் ! எப்பொழுதும் - நான் இலேசாகச் சொல்லிக்கொண்டிருப்பது போல '' முருகா '' என்று இயல்பாகக் கூறி தண்டனிட்டு சுவாமிகளை வணங்கினேன் ! அப்பொழுது சுவாமிகள் கூறினார்கள் : —

'' எங்கும் நீங்காது நிறைந்திருக்கும் பரப்பிரம்மமும் - நீ வழிபட்டு வரும் முருகப் பெருமானும் — உனது குருவாகிய நாமும் ஒன்றுதான் '' – என்று கூறி '' அந்த நினைப்பிலேயே இருக்கட்டும் '' — என்று அனுக்ரகித்தார்கள் !! அத்துடன் " முருகனுக்குப் பழத்தின்மேல் மிகப்பிரியம் '' என்று சொல்லி பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த வாழைப் பழங்கள் சிலவற்றையும் எடுத்து அடியேனுக்கு கொடுத்து ஆசீர்வதித்தார்கள் !!

(4)

திருப்பெருந்துறையிலே - குருந்த மரத்தடியில் சிவபெருமானே தமக்குக் குருவாய் வந்து தரிசனம் கொடுத்துத் தடுத்தாட்கொண்டு நல்லருள் செய்தார் என்று - மணிவாசகப் பெருமான் கூறியிருக்கிறார். அவர் தமது ஞானகுருநாதனை " தேவருமறியாச்சிவனே " என்றும் போற்றியுள்ளார் ! சிவனாகியகுருபரன் - தம்மைத் தடுத்தாட்கொண்டருளிய பெருந்தகமையை - '' திருவண்டப்பகுதி " என்னும் பாடலிலே அவர் பின்வருமாறு கூறுகின்றார் :—

" கருணையின் பெருமைகண்டேன் காண்க !
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க !
சிவனெனயானும் – தேறினன் காண்க !
அவனெனை யாட்கொண்டருளினன் காண்க !! "

என்று - சிவனே புவியில் வந்து தமக்கு அருள் செய்தார் என்றும் உறுதிப்படுத்துகின்றார் ! மேலும் அவர் – " போற்றித் திருவகவல் " என்றும் பாடலில் கீழ்க் கண்டவாறும் கூறியுள்ளார் :—

" என்னையும் ஒருவனாக்கி இருங்கழற்
சென்னியில் வைத்த சேவகபோற்றி "

இவ்வாறெல்லாம் மணிவாசகப் பெருமான் சொல்லியிருப்பதைக்கொண்டு, குருதேவர் தடுத்து ஆட்கொள்ளும்பொழுது, மாணவனாகிய சீடனுக்கு " திருவடிதீட்சை " செய்வது வழக்கம் என்று நாமறியலாம். அதையடுத்து " சட்சுதீட்சை " - அதாவது கண்ணோக்கம் செய்து அனுக்ரகிப்பதும், மனத்தால் நினைத்து-ஸ்பரிசித்து ஆசீர்வதிப்பதும் மரபு !! இவைகளெல்லாம் - தீட்சாமுறையிலுள்ள பத்ததிகள் !!

இவ்வாறே - நமது சத்குரு தேவர் அவர்களும் அடியேனைத் தடுத்தாட்கொண்டபோது - அடியேனது சிரத்தின்மீது திருவடிகளைத் தூக்கி வைத்து நல்லருள் செய்தும் – கண்களால் நோக்கி நல்லனுக்ரகம் செய்தும்-மனத்தால் நினைத்தும் ஸ்பரிசித்தும் நல்லாசீர்வாதம் செய்தும் – அடியேனை அவர்களது கருணைக்கு ஆளாக்கினார்கள் !! அவ்வாறு அருள் செய்த – அவர்களின் பெருந்தகமையை அடியேனும் - அடியேனுக்குள்ள சிற்றறிவுக்குத் தகுந்தாற்போல - முகப்பிலுள்ள குருவணக்கச் செய்யுளில் மனமாரப் போற்றிப் பாடிக்கொண்டாடியிருக்கின்றேன்.

(5)

பிறவி எடுத்ததின் பெரும்பயன் - "ஞான அடைவு" தான் என்பது பெரியோர் கருத்து ! ஞானத்தின் முடிவு "பிறவாப் பெருநிலை" என்பது ஞானிகளது முடிவான தீர்ப்பு !! வடலூர்ப் பெருமான் ராமலிங்க அடிகளார் இதனை "மரணமிலாப் பெரு வாழ்வு" - என்று வருணிக்கின்றார் !! இந்த நிலையைப் பெறுவதற்கு முதற்படி - "மனோலயம் பெறுவதுதான்" - என்பது அனுபவிகளாகிய அவர்களது கருத்தாகும்! "மனோலயம் பெற்று நிட்டை சாதித்தால் மோன நிலையை குருவருட்துணையால் எட்டிப் பிடிக்கலாம்" என்று அவர்கள் கூறுகின்றார்கள் !! அதனாலே தான் "மோனம் என்பது ஞான வரம்பு" என்று ஆன்மீகநிலையி லுயர்ந்த மகான்கள் கூறியுள்ளனர் ! ஞானிகளெல்லாம் - மோன நிலையிலுயர்ந்து விளங்கும் முத்தர்கள் தாம் !! அந்த நிலைக்கு உயர்வதற்கு – மனோலயம் மிகவும் அவசியமானது !! அதனையே சத்குருமார்கள் தகுதியறிந்து உபதேசிப்பார்கள் ! தடுத்தாட்கொள்ளப்படும்போது இதற்கான வழியைத் தான் கூறி அருள் பாலித்து அனுக்ரகம் செய்வார்கள் ! அதையே தான் குருதேவரவர்கள் அடியேனுக்கும் கருணை கூர்ந்து கூறி அனுக்ரகித்தார்கள் ! அந்த வழியிலே தான் அடியேன் நீண்டகாலமாக சாதனை புரிந்து வருகின்றேன்!! இது மிகவும் நுட்பமான (ஒரு வகையில் சுலபமான) சாதனைதான் ! ஆனால் செயலளவில் இது மிகக் கடினமானது ! இவ்வழியில் செல்லும் போது பல தடைகள், கஷ்டங்கள், பிணிகள், தோல்விகள், ஏமாற்றங்கள் - இவை[illegible]தான் செய்யும் !! இவற்றையெல்லாம் தாண்டி தொடர்ந்து நீண்டகாலம் சாதனை செய்தால் [illegible]டுமே "மனோலயம்" பூர்[illegible]க சித்திக்கும் !! இதற்கு [illegible]ருவின் திருவருள்தான் முக்கியமாக வேண்டியிருக்கும் ! ஆ[illegible] – குருவின் திருவடிகளைப்பற்றிக் கொண்டு - அவரது [illegible]தான் நா[illegible] முன்னேறியாக

வேண்டும் !! இதற்கு குரு அருளுடன் – பூர்வ புண்ணியமும் உறுதுணையாக யிருக்கும் என்பது நமது குருதேவரவர்களின் திருவாக்கு !!

மனம்தான் எல்லாவற்றிற்கும் ஆதார மூலம்! மனம் நினைத்த ஒன்றைக் கொண்டுதான்-பேச்சு, செயல் யாவும் நடை பெறுகின்றன! ஆகவே இந்த மனம் அடங்கி ஒடுங்கும் போது தான் "மனோலயம்" வாய்க்கும் !! இவ்வாறு மனத்தை அடக்கி ஒடுக்கி மனோலயம் பெற்றால் - ஐம்பூதங்களும், ஐம்புலன் களும் அடிமையாகி விடும் ! பின்னர் "தன்னையறிவது" சாத்திய மாகும்! "யார் தன்னில் இறைவனைக் காண்கின்றார்களோ - அவர் களுள் உலகமே அடங்கும்" என்பது - ஆன்றோர்கள் அனுபவம்!!

"ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயத்தை" சத்குரு மார்களால் தான் சொல்லிக்காட்ட முடியும் ! ஏனையோர் களால் அது இயலாது!! மனோவிருத்திகளடங்கும் போதுதான் மனோலயம் பூரணமாகச் சித்திக்கும் ! ஆகவேதான் - "ஐயே இது மெத்தக் கடினம்" என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடினார்!!

மனம் எளிதில் அடங்கி நிலை நிற்காது! ஓயாமல் சலனப் பட்டுக் கொண்டிருப்பதே மனத்தின் தன்மை! மனத்தைப் பார்த்து - "பேயாயுழலும் சிறு மனமே" என்று பாடினார் சுப்பிரமணிய பாரதியார்! மிக வேகமாக - மனம் ஓடிக்கொண்டி ருக்கும் ! அதனைக்கட்டிப் பிடித்து இழுத்து நிலைப்படுத்தினால் மனோலயம் கிட்டும் ! மீண்டும் மனம் ஓடிப்போகும் ! அதனைத் தடுத்து நிறுத்த மறுப்படியும் முயல வேண்டும் ! ஆகவே இந்த சாதனையை நீண்ட காலம் புரிந்து தான் பூரணமாக மனோலயம் பெறுக வேண்டும் !! அதற்கு வழி காட்டுபவரே சத்குரு !! மனம் ஒருவாறு அடங்கி நிலை பெற்ற போது மனத்திலே அமைதி ஏற்படும் ! அறிவிலே தெளிவு ஏற்படும் !

மெய்யறிவு விளக்கம் தலை தூக்கும்! மனம் லயப்பட்ட காலத்தி லோ "சுகானுபவமும் தோன்றும்! இருள் விலகி உள்ளத்திலே ஒளி விளங்க ஆரம்பிக்கும்! மனோலயம் - நீடித்தபோது "சும்மா இருக்கும் சுகம்" கிடைக்கும் என்பர் அனுபவிகள்!! அதன் முடிவான அனுபவமே - "ஆத்மானுபம்" – 'சிவானுபவம்', முதலியவை!! இவற்றையெல்லாம் குரு அருள் துணை தான் கூட்டிவைக்க முடியும்!! மனம் ஒரளவுக்கு அடங்கப் பெறுவதே -மிக மிகக் கடினம் "மனோலயம் பெறுவது" அதைவிடக் கடினம் குருவருளும் நீண்ட கால சாதனையுமிருந்தால், அதில் வெற்றி பெற்று மேல் நிலை பெறலாம். "தடுங்கோள் மனத்தை" என்று கூறிய அருணகிரியார் பின்னர் "அருள்தானே வெளிப்படும்" என்றும் விளக்கியுள்ளார். இவ்வாறுய-சாதனைகளால் "சும்மா இருக்கும் சுகம் கிட்டும்,, என்பது ஞானிகளின் அனுபவம்!! இவ்வாறு "சும்மா இருப்பதில்" வெற்றி கண்டோருக்கு "யான் –எனது என்பதில்லாது - யாவும் தானாகும் இதய பாவனாதீதம் ஏற்படும்"- என்று முருகப் பெருமானின் திருவருளைப் பூரண மாகப் பெற்ற "அருணகிரிநாதர்" பாடியிருக்கின்றார் !!

(6)

மற்றும் - குருதரிசனம் கிடைத்து அந்த குருவால் தடுத் தாட் கொள்ளப் பட்டால் - "கர்மவினைகளும்" நசிக்கின்றன என்று திருமந்திரம் பேசுகின்றது!!

"சூரியகாந்தமும் - சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ் பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல
ஆரியன் தோற்றமுன் அற்றன மலங்களே"

சூரியகாந்தக் கண்ணாடி முன் பஞ்சை வைத்தால் அதில் தீப்பற்ற மாட்டாது! ஆனால் - சூரியனுக்கும் சூரிய காந்தக் கண்ணாடிக்கும் பக்கத்தில் அந்தப் பஞ்சைப் பிடித்தால் அது

தீப்பற்றி எரிந்து விடும்! இது கண் கூடான விஷயம்! சூரியனுடைய வெப்பத்தை சூரியகாந்தக் கண்ணாடி வாங்கி பஞ்சை எரித்து விடுகின்றது! அதுபோல — ஞானசிரிய ராகிய குருதேவர் தோன்றி தடுத்தாட் கொண்டு விட்டால் அவ்வாறு தடுத்தாட் கொள்ளப் பெற்றவரின் மும்மலங்களும் (ஆணவம், காமியம், மாயை ஆகியவை) நசித்து விடுகின்றன! கடவுளுக்கும் நமக்கும் இடையேயுள்ள குருதேவர் - கடவுட் சக்தியாகிய அருட்சக்தியைப் பெற்று — அதன் மூலம் நமது மும்மலங்களும் நசித்துப் போகுமாறு செய்கின்றார்! இவ்வாறு மேற் சொன்ன திருமந்திரப் பாடல் வலியுறுத்திக் கூறு கின்றது!!

இதிலிருந்து கடவுட் சக்தியாகிய "அருட்சக்தி தான்" எல்லா வல்லமைக்கும் இவ்வகையில் காரண மூலகாகயிருக் கின்றது என்பதை நாமறியலாம்! சத்குரு தேவர் அவர்கள் இந்த கடவுட் சக்தியாகிய அருட் சக்தியைப் பெற்று நமக்குக் கொடுப்பதற்கு வல்லமை யுடையவராக யிருக்கின்றார் என்பதையும் நாமறிந்து கொள்ள வேண்டும்!! — குருதேவரிடம் கடவுட் சக்தியாகிய அருட்சக்தி பரி பூரணமாக நிறைந்து நிற்கும்! அது அவர்களின் தவ வலியினால் ஏற்பட்ட பெருமை என்றே சொல்ல வேண்டும்!!

இப்போது, தடுத்தாட் கொள்ளப்படும் பொழுது - எவ்வாறு அவர் கடவுட் சக்தியாகிய அருட் சக்தியை நமக்குக் கொடுத்தருளுகின்றார் என்பதை • விஞ்ஞான ரீதியாக ஒரு உதாரணத்தைக் கொண்டு ஆராய்ந்து விளங்கிக் கொள்ளுவோம்!!

மின்சாரம் - மிகப் பயனளிக்கக் கூடிய ஒரு அபூர்வமான இயற்கை சக்தி! இதனை நாம் கண்கூடாகப் பார்க்க முடியாது! ஆனால் - இதனுடைய செயலைக் கொண்டு இந்த

சக்தியிருப்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கின்ரோம்! மின்சார சக்தி நமக்கு விளக்கு எரிக்கவும் - காற்று உண்டாக்கவும் உதவுகின்றது! வேறு பல காரியங்களுக்கும் அது பயன் படுகின்றது! இந்த மின்சார சக்தியை பெரிய அளவில் மின் நிலையங்களில் – தேக்கி வைத்திருக்கின்ருர்கள் !! அதனை நமது வீடு முதலிய இடங்களில் - நமது தேவைகளுக்கான விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்காக - நமது ஊர்களில் தெருக்களில் கம்பங்கள் நட்டு - அவற்றின் மீது உயரமான இடங்களில் மின்சாரக் கம்பிகளை அமைத்து அவற்றின் மூலம் - இந்த மின்சார சக்தி தெருக்களில் பயன் படுவதற்கு ஏற்பாடு செய்கின்ருர்கள் !! அந்த மின் கம்பிகளின் மூலம் மின்சார சக்தியைப் பெற்று நாம் உபயோகப் படுத்த வழி ஏற்படுகின்றது ! !

மற்றும் - விளக்குகள் எரிவதற்காகவும் காற்று உண்டாக்குவதற்காகவும் நமது வீடு முதலிய இடங்களில் மின்சாரக் கம்பிகளையும்-விளக்குகளையும் - காற்ருடிகளையும் அதற்கான சாதனங்களையும் அமைத்துத் தயார் செய்து வைக்கின்ரோம். அந்த அளவில் - நமது வீடு முதலிய இடங் களில் விளக்குகள் எரிவதுல்லை! காற்ருடிகள் சுழலுவது மில்லை!! வேறு வகையில் அந்த சக்தி பயன் படுவதுமில்லை!!

ஆயினும் - தெருக்கம்பங்களில் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பிகளுக்கும் - நமது வீடு முதலிய இடங்களிலமைக்கப் பட்டுள்ள மின் கம்பிகளுக்கும் இடையில் - வேறு ஒரு தொடர்புக்கம்பியை இணைத்து இரண்டுக்கும் தொடர்பு ஏற்படுத்தி, அதற்கு உபகரணங்களாகிய சாதன அமைப்புக் களையும் நாம் அமைத்து விட்டோமாஞல், நமநு வீடு முதலிய இடங்களில் விளக்குகள் எரிய ஆரம்பிக்கின்றன! காற்ருடிகள் சுழலுகின்றன! இன்னும்-எத்தனை எத்தனையோ காரியங்கள் அந்த மின்சக்தியின் மூலமாக நடைபெறுகின்றன!!

இதை இன்னும் விளக்கிச் சொல்லுவதெனில் - தெருக் கம்பங்களிலுள்ள மின் கம்பிகளுக்கும், நமது வீடு முதலிய இடங்களிலமைக்கப் பெற்றுள்ள மின் கம்பிகளுக்கும் இடையே பொருத்தப் பட்டுள்ள தொடர்புக்கம்பி தெருக் கம்பங்களிலுள்ள மின்கம்பிகளில் ஓடிக்கொண்டிருக்கும் மின் சாரசக்தியை வாங்கி, நம் வீடு முதலிய இடங்களிலமைக்கப் பெற்றுள்ள கம்பிகளுக்கு வினியோகிக்கின்றது! அதன் மீது அதற்காகப் பொருத்தப் பெற்றுள்ள விசைகளை நாம் இயக்கி விட்டால், நமது வீடு முதலிய இடங்களில் விளக்குகள் எரிய ஆரம்பிக்கின்றன! காற்றுடிகள் சுழலுகின்றன! இன்னும் பல காரியங்கள் - அதனுல் நடைபெறுகின்றன !!

(7)

அது போலவே - அகில மெங்கும் சர்வ வியாபகமாகப் பரவியுள்ள கடவுட் சக்தியாகிய அருட்சக்தியை, கடவுளுக்கும் நமக்கும் இடையிலுள்ள நமது குரு தேவர் அவர்கள் - நமக்குப் பெற்றுத்தருகின்ருர்கள்!! தெருக் கம்பங்களிலுள்ள மின் கம்பிகளில் ஓடிக்கொண்டிருக்கும் மின்சார சக்தியைத் தொடர்புக்கம்பி எப்படி வாங்கி நம் வீடு முதலிய இடங்களில வைக்கப் பெற்றுள்ள கம்பிகளுக்கு வினியோகிக்கின்றதோ - அதே மாதிரி - அகில மெங்கும் சர்வ வியாபகமாகப் பரவி நிறைந்திருக்கும் கடவுட் சக்தியாகிய அருட்சக்தியை - குரு தேவர் தமது தவ வலியால் பெற்றுத் தம்மிடம் பரிபூரண மாகத் தேக்கி வைத்திருப்பதால், அந்த சக்தியை தீட்சா சமயத்தில் நமக்குக் கொடுத்து நல்லருள் செய்கின்ருர்!!

இதே விதமான சக்தி நம்மெல்லோரிடத்திலும் ஓரளவு மறைந்தும் கிடக்கின்றது! குருதேவர் மூலமாக - மேற் சொன்ன விதத்தில் நமக்குக் கிடைக்கும் சக்தியும் நம்மிடம் கூடிக் கொண்டு-நம்மிடம் மறைந்திருக்கும்-சக்தியைத்தூண்டி விட்டு மேலும் ஆக்கமளிக்கின்றது ! அத்துடன்மின் உபகரண

சாதனங்களிலுள்ள விசைகளை இயக்கிப் பயனடைவது போல, நாம் குருதேவர் மூலம் அறியக்கூடிய சாதனங்களை, முறைப்படி நாம் அனுட்டித்த போது, நாமும் அதன் மூலம் பயனடைகின்றோம் ! அதாவது – அதன் வாயிலாக நம்மிடம் அந்த அருட்சக்தி பல்கிப் பெருகி நாமும் "சக்தி மயமாகி" நாளடைவில் அதனாலாய பெருநிலையைப் பெருகின்றோம் ! அந்த நிலையில் - நாம் நம்மையும் - நமக்காதாரத் தலைவனையும் அறிந்து - உணர்ந்து - குருதேவரைப் போல நாமும் கடவுள் மயமாகி விடுவோம் ! இதுதான் இவற்றிலிருந்து நாமறிந்து கொள்ள வேண்டிய சூக்ஷமம் !!

இங்கு-மற்றோர் விஷயத்தையும் நாம்கவனிக்க வேண்டும் எவ்வாறு மின்சக்தி கண்ணுக்குத் தெரிவதில்லையோ - அவ்வாறே கடவுட் சக்தியாகிய அருட் சக்தியும் நமக்குத் தெரிய மாட்டாது ! ! மின்சக்தியின் செயலைக் கொண்டு - நாம் மின்சார சக்தியிருப்பதைத் தெரிந்து கொள்ளுவது போல - அருட்சக்தியின் செயலைக் கொண்டு தான் அந்த சக்தியிருப்பதையும் - அதற்கு மூலாதாரமான கடவுளிருப் பதையும் நாம் அறிந்து உணருதல் வேண்டும் ! !

"அருள்" - என்பது கடவுளின் செயலுக்குள்ள சிறப்புப் பெயர் ! அதனால் – கடவுட் சக்தியாகிய கடவுளின் செயலும் – "அருட்சக்தி" என்ற பெயரைப் பெற்றது ! ! "அருளதுசக்தி யாகும் - அரன்றனக்கு" - என்று சிவஞானசித்தியில் கூறப்படு கின்றது ! சக்தி என்பது செயலைக் குறிக்கும் ! அருள் - என்பது அதற்குரிய சிறப்புப் பெயர் ! அதனால் அரனாகிய ஆண்டவனுடைய சக்தியை "அருட்சக்தி" என்று குறிப் பிட்டார்கள் ! அரனாகிய கடவுளைச் "சிவனென்றும்" அவனது அருளாகிய செயலை "சக்தி என்றும்" நமது சமய நூல்கள் விவரிக்கின்றன ! ஆகவே - அருட்சக்தி நம்மிடம் பரிபூரண

மாகப் பெருகி நின்றபோது நாம் "ஆண்டவன் மயமாகி விடுகின்றோம்" - என்பது கருத்து !!

இந்த "அருள் நிலை" நமக்கு நீண்ட சாதனைகளின் மூலமே கிட்டுதல் கூடும் ! இதற்கு குருதேவர் அவர்களின் திருவருளே துணை செய்ய வேண்டும் !! இந்த அருள் நிலை - கைவரப் பெற்றபோது - "யாவுமே தானாகியிருக்கும் ஆத்மானுபவமும் - அதற்கும் அப்பாலாயுள்ள சிவானுபவமும்" சித்திப்பது சாத்தியமாகும் என்பது ஞானிகள் கருத்து !! இதற்கு - நம்மைத் தடுத்தாட்கொண்ட குருதேவர் அவர்கள் தூல உடல் தாங்கி நம்மிடையே இருந்தாலும், அல்லது நம்மை விட்டுப் பிரிந்து மறைந்து "அருளுருவம்" பெற்றாலும், அவர்கள் தொடர்ந்து நமக்கு நல்லுதவி செய்து கொண்டிருப்பார்கள் !! அவர்கள் தோன்றாத் துணையாக நம்முள் இருந்து, நமது தகுதிக்கும் - சாதனைக்கும் ஏற்ப - நமக்கு அப்போதைக்கப்போது வழிகாட்டி நல்லருள் செய்து கொண்டிருப்பார்கள் !! அதற்கு நாம் செய்யவேண்டியது - அந்த நமது குருதேவர் அவர்களிடம் பரிபூரணமாகச் சரணாகதியடைந்து - அவரது தூய திருவடிகளை மனத்திலிருத்தி - அவற்றை விடாமல் பற்றிக் கொண்டு சதாகாலமும் வழிபட்டு வருவதேயாகும் !!

(8)

எனவேதான் - "திருவடிதியானம் அத்தியாவசியமானதென்று ஞானநூற்கள் கூறுகின்றன !!

சத்குருவின் சம்பந்தத்தால் - எவ்வாறு மன அமைதி ஏற்பட்டு நமக்குத் தெளிவு ஏற்படுகின்றது என்பதை அடுத்து கவனிப்போம் !!

"தெளிவு குருவின் — திருமேனி காண்டல்
தெளிவு குருவின் — திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் — திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு — சிந்தித்தல் தானே"

இது "திருமந்திரந்திலுள்ள" செய்யுள்! இதில் - "தெளிவு" என்று கூறப்படும் வார்த்தைக்கு "மெய்யறிவுவிளக்கம் அல்லது "ஞானவிளக்கம்" என்பது பொருள்! தெளிவு அல்லது "விளக்கம்"-என்றால் "ஐயப்பாடு நீங்கிய விளக்கம்", என்றே சொல்லவேண்டும் !!

குருதேவரின் - திருமேனியை பக்தி பூர்வமாக தரிசித்து வணங்கினால், அவர்களது அருட்கருணையால் கவரப்பட்டு மனத்திலே கலக்கம் நீங்கி விளக்கம் ஏற்படும் !!

குருதேவரின் — திருநாமத்தை இடைவிடாது ஜபித்து வந்தால், மேலும் விளக்கம் விரிவடைந்து அமைதி ஏற்படும் !!

குருதேவரின் — திருவார்த்தையை உபதேச பூர்வமாகக் கேட்டால், மெய்யறிவு தலைப்பட்டு, அமைதியடைந்த மனத்தில் உண்மையுணர்வு ஏற்படும் !!

குருதேவரின் — திருவுருவை மானசீகமாகவும் – ஒரு நிலைப்பட்ட எண்ணத்துடனும் சிந்தித்து வந்தால் இறுதியில் மெஞ்ஞானமும் சித்திக்கும் !! இதுவே மேற்கண்ட பாடலின் பொருள் !!

இந்த நான்கு பத்ததிகளும் - சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கு "சோபன மார்க்கங்களைப் போன்றவை! இவைகளின்படி நடக்கும் மக்களுக்கு "ஞான அடைவு" கிட்டுவது எளிதாகும் !!

(9)

குரு அருளால் - பிறவிப் பெரும்பயனாகிய "ஆன்மீகலாபம்" மட்டும் கிடைக்குமென்பதில்லை! மக்களின் இப்போதையத் தேவைகளுக்கான "இலௌகீக ஆதாயங்களையும்" குரு அருள் கூட்டிவைக்கும்!!

அப்பர்சுவாமிகள் - இறைவனது கருணைச்செயலை எடுத்துக் கூறும்போது "வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய்" — என்று கூறியிருக்கிறார்! அதுபோல - இறைவனையொத்த சக்திவாய்ந்த சத்குருதேவர்களும் - வேண்டுவார் - வேண்டுவனவற்றைக் - கொடுக்கக்கூடிய வல்லமை பெற்றவர்கள் தாம்!! இது கண்கூடாகத் தெரிந்துக் கொள்ளக்கூடிய உண்மை!!

சத்குருதேவர்களாகிய மகான்கள் - மக்களின் மன உருக்கத்திற்கும் - தகுதிக்குரியதான தேவைகளுக்கும் ஒப்ப — நல்லருள் செய்து அனுக்ரகம் செய்வார்கள்!! ஆதலால்-ஆன்மீகலாபம், இலௌகீகலாபம் ஆகிய இரண்டையும் விரும்பி வேண்டும் பக்தர்களுக்கு, அந்தந்த வகையிலே அவர்கள் நல்லருள் செய்து ரக்ஷிக்கின்றார்கள்!! அவரவர்கள் - அவரவர்கள் பக்குவ நிலைக்குத் தகுந்தாற்போல, விரும்பியவற்றை வேண்டி - குருதேவர்களாகிய மகான்களால் அனுகூலமடைகின்றார்கள்! அந்த முறையிலேதான் - நமது ஞானசத்குருதேவரைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வேண்டி நற்பயனடைந்திருக்கின்றார்கள்! இனியும் - அவர்களது அருளை விரும்பி வேண்டி நிற்பவர்களுக்கு - அவர்கள் அருளுருவமாகவும் - தோன்றாத் துணையாகவுமிருந்து நல்லருள் செய்வார்கள்!!

இத்தகைய வேண்டுதலில் "நம்பிக்கை" தான் மிகமிக முக்கியமானது! குருஅருளை நம்பிக்கையுடன் வேண்டி நிற்கும் மெய்யன்பர்களுக்கு - குருதேவரவர்கள் கருணைகொண்டு அவர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வார்கள் என்பது நிச்சயம்!! "நம்பிக் கெட்டவரில்லை - இது நான்குமறைத் தீர்ப்பு" என்றார் நமது தேசியக் கவியாகிய பாரதியார்!

(10)

குருதேவர் அடியேனை ஆட்கொண்டு சுமார் பத்தாண்டுகள் வரையில் எனக்கிருந்த இலௌகீகத்துன்பங்கள் மாற

வில்லே! உள்ளவாறே அவை நீடித்தன! ஆனால் - அதற்கிடையே இயன்றவரையில் சாதனையைப் பழகி வந்தேன்!! "கர்மவினைகளிருப்பதை அனுபவித்து விடுவோம்! கவலைப்பட வேண்டாம்! காலம்மாறும்" என்று சுவாமிகள் சொல்லி அப்போதப்போது அடியேனை ஆசீர்வதித்து வந்தார்கள்!! இடையிலே அடியேனும் மிகுந்த நோய்வாய்ப்பட்டு குருவருளால் குணமடைந்தேன்!! சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு ஓர் தினம் தபோவனத்தில் -குருதேவரவர்கள் அடியேனைக் கூப்பிட்டனுப்பினார்கள்! அடியேனும் சென்று வணங்கி எழுந்தேன்! சுவாமிகள் சொன்னார்கள் "நீ தபோவனத்திற்கு சில காணிக்கைகள் கொடுத்திருக்கின்றாயல்லவா? - இப்போது - சுவாமி உனக்கு நன்கொடை தரப் போகின்றார்! பெற்றுக் கொண்டு அதைப் பத்திரமாக வைத்துக் கொள்! மங்களகரமாயிருப்பாய்!" என்று கூறி ஆசீர்வதித்தார்கள்.

அத்துடன் அண்மையிலிருந்தஅப்போதைய தபோவனம் நிருவாகியாகிய ஸ்ரீ தாசகிரி சுவாமி அவர்களை அழைத்து ஜாடை காட்ட அவர் பணம் வைத்திருந்த ஒரு சிறு-பெட்டியை எடுத்து வந்து கொடுத்தார். அதில் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அடியேனுக்கு சுவாமிகள் ஆசிர்வதித்துக் கொடுத்தார்கள் ! அடியேனும் சுவாமிகளைத் தண்டனிட்டு வணங்கி அவர்கள் ஆசீர்வதித்துக் கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டைப் பெற்றுக்கொண்டேன். அதை நான் மிகவும் பத்திரமாக எனது பெட்டியில் வைத்திருக்கின்றேன்! அது முதற் கொண்டு - எனது இலௌகீகத்துன்பங்கள் யாவும் படிப்படியாக நீங்கி-தற்பொழுது அடியேன் குருவருட்டுணையினால் எல்லா வகைகளிலும் சௌகரியமாக நல்வாழ்வு வாழ்ந்து வருகிறேன் ;! குருதேவரவர்கள் அனுக்ரத்ததினால் - சாதனையையும் தொடர்ந்து செய்து வருகின்றேன் ! இவற்றிலிருந்து குருதேவரவர்கள் பக்தர்களுக்கு "ஆன்மீக லாபத்தையும் - இலௌகீக

அனுகூலத்தையும்'' - ஒரு சேரக் கூட்டி வைத்து ரக்ஷிப்பார்கள் என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளலாம் !!

குரு தேவரவர்களின் கட்டளைப்படி, அடியேனும் அடியேனது மனைவியும், கடந்த 1972ஸு காசி, கயா. ஹரித்வாரம் ரிஷிகேசம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கும், பம்பாய், டில்லி, கல்கத்தா முதலிய நகரங்களுக்கும், காஷ்மீரம், நேபாளம் முதலிய பகுதிகளுக்கும் யாத்திரை போய் திரும்பி வந்தோம் ! பின்பு இராமேஸ்வரம், பழனி, குருவாயூர், மருதமலை முதலிய ஸ்தலங்களுக்கும், பெங்களூர், மைசூர் முதலிய நகரங்களுக்கும் சென்று - அதன் பின்னர் தபோ வனத்திற்கு வந்து, 1973 ஸு (தமிழ் - மாசி மாதத்தில்) ஆசார்ய ஸ்வாமிகளுக்கு பாத பூஜையும் நடத்தினோம் !! அதற்கு மரு தினம் சிவருத் திரிதினத்தின்று பகல் பனி ரெண்டுமணி சுமாருக்கு சுவாமிகள் தனியிடத்திருந்து, அடியேனுக்கு தேவைப்பட்ட விஷயங்களிலெல்லாம் நல்லாலோசனை கூறி நல்லருள் புரிந்ததுடன் - கருணை கூர்ந்து அடியேனுக்கு ''மேல் நிலை அனுபவம்'' சித்திக்கு மாறும் அனுக்ரகம் செய்தார்கள் !! அவர்கள் கிருபா கடாட்சத்தினாலே - அவர்கள் சொல்லிய அளவில் சிரம சாத்தியமில்லாமல் அடியேன் அதனை அடைந்து அனுபவித்தும் வருகின்றேன் !!

மேலும் குருதேவர்கள் சில சமயங்களில் அடியேன் செய்ய வேண்டியதான மக்கட் தொண்டு, தெய்வத் தொண்டு ஆரியவைகளை விவரித்துக் கூறி கட்டளைகளும் பிறப்பித்துள்ளார்கள் !! இயன்ற வகையில் அடியேன் அவற்றைச் செய்தும் வருகின்றேன் ! இனி அவற்றைத் தீவிரமாகச் செய்யவும் தீர்மானித்துள்ளேன் ! குரு அருள் அதற்குத் துணை நிற்குமாக !!

அடியேன் சென்ற - 1973 ஸ்ரீ சித்ரா - பௌர்ணியன்று குரு பூஜைக்காக தபோவனம் வந்திருந்தேன்! குரு பூஜையை யடுத்த மருதினம் "பாத பூஜையொன்று" நடந்து கொண்டிருக்கும் தறுவாயில் - அடியேன் சுவாமிகளை வணங்கி எழுந்த போது - ஸ்வாமிகள் புன் முறுவல் பூத்து ஆசீர்வதித்ததுடன்- "குரு அருள் பரிபூர்ணமாக இருக்கிறது! கடமையைச் செய்வோம்! யாவும் மங்களகரமாக நடக்கும்" என்று கூறி ஒரு எலுமிச்சம்பழத்தையும் எடுத்து அனுக்ரகித்துக் கொடுத்து ஆசீர்வதித்தார்கள்! அந்த எனது கடமையை அடியேன் நன்கு செய்ய குருதேவர் அவர்கள்தான் கருணை புரிந்து வாய்ப்பளித்து நடத்தி வைக்க வேண்டும் !!

அடுத்ததினம் சுவாமிகளிடம் விடை பெற்றுக் கொண்டு வணங்கி வரும்போது, அவர்களை சந்தித்தது தான்-அவர்களை தூல உடலுடன் அடியேன் காணக் கிடைத்த இறுதிச் சந்திப்பாக முடிந்தது! பின்னர் அவர்கள் மகாசமாதியடைந்த பிறகே - அடியேன் தபோவனம் வர முடிந்தது! இனி அவர்களை நேரில் காணக் கூடிய பாக்கியமில்லை! அவர்களது அருட் கருணையினால் மானசீகமாகத்தான் அவர்களது திருவுருவைக் கண்டு மகிழ வேண்டும் !! வணங்கி நல்லருள் பெற வேண்டும் !!

மேலே கூறியவைகளிலிருந்து - குரு தேவரவர்களின் திருவருட் கருணையிருந்தால் - நாமனைவரும் இம்மையிலும், - மறுமையிலும் எல்லா நலன்களும் பெற்று நற்பேறு பெறலாம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் !!

(11)

குருவின் திருவருளைப் பெறுவதற்கு - குருவினுடைய "திருவடி தியானம்" அவசியம் என்று மேலே குறிப்பிட்டுள்

ளேன் !! ஆயினும் - சாதாரண மக்களுக்கு குருவின் வழிபாடே போதிய நற்பலன்களைக் கொடுக்கக் கூடும் !!

குருவின் கருணையைப் பெறுவதற்கு - முதலில் 'குருபக்தி' முக்கியமாகத் தேவைப்படும் ! குரு பக்தி என்றால் குருவினிடம் அன்பு கொள்ளுவது என்பது பொருள் ! அந்த "குரு பக்தி" இரு வகையிலேற் படக்கூடும் !!

குரு பெருமானிடம் நமக்குத் தேவையான சில நலன்களைக் கருதி — அதை அவர்கள் கொடுத்து ரக்ஷிக்க வேண்டுமென்று எதிர் பார்த்துச் செய்யப்படுவது ஒருவகை ! அந்த வேண்டுதல் - ஒரு வகை ஆசை அல்லது விருப்பத்தால் ஏற்பட்டது என்று சொல்லாம் !!

மற்றொரு வகையானது-எந்த வகையான பிரதி பலனையும் எதிர் பாராமல் "நிஷ்காமியமாக" குருதேவரிடம் கொள்ளும் தூய்மையான அன்பாகும் ! முதலாவது சொன்ன அன்பை - ஆசை என்றும் விருப்பம்" என்று சொல்லி விட்டு' இரண்டாவது,, சொன்ன அன்பை " தூய அன்பு " என்று குறிப்பிட்டது - அதனதன் தகுதியை ஒட்டியே ஆகும் !!

"இலௌகீக அபிலாஷைகள்" - அதிகம் மிகுந்த இந்த உலகத்தில், மக்களில் பெரும்பாலோர் - பிரதி பலன்களை எதிர் பார்த்துத் தான் அன்பு செய்வார்கள் ! அது தான் இயல்பும் கூட ! இம்மையிலே தேவைப்பட்ட சுகங்களை விரும்புபவர்கள் அந்த வகையைச் சேர்ந்தவர்கள தான் ! அதல்லாமல் - 'ஆன் மீகத்துறையிலே" சுகம் வேண்டி நிற்பவர்கள் கூட ஒரு வகையில் பிரதி பலனை வேண்டித்தான் அன்பு செலுத்துகின்றார்கள்! அந்தந்த நிலையில் - அவரவர்களுக்குத் தேவையிருப்பதும் - அவற்றை வேண்டி மக்கள் அன்பு செய்வதும் ஓரளவு நியாயமானது என்பதே

அடியேனது கருத்து! இவ்வாறு பிரதிபலனை ஏதாவது ஒரு வகையில் எதிர்ப்பார்த்துச் செய்வது- "காமியமாகக் கருதப் பட்டாலும்" அவற்றிற்கும் கருணை புரிந்து அருள்பாலிப்பதுதான் கடவுட்தன்மை! அதைத்தான் சத்குரு தேவர்களும் கைக் கொண்டு "காமிய நோக்கில்" அன்பு செய்பவர்களுக்கும், "நிஷ் காமியமாக" அன்பு செய்பவர்களுக்கும் அருள் புரிந்து அவர் களது கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்து ரக்ஷிக் கின்றார்கள்!

ஆயினும்—பிரதிபலன் கருதாது (அதாவது பயன் எதையும் எதிர்பாராது) செய்யும் "நிஷ்காமிய" அன்பே மிகவும் மேலானது! அத்தகைய அன்பு கொள்ளுவது எளிதல்ல! ஆசையை அறவே விட்டுவிட்டவர்களால் தான் அது முடியும்! ஏனையோர்களால் அவ்வாறு செய்ய இயலாது! "இலௌகீக இன்பங்களை விரும்பி" -கடவுளிடம் அல்லது குருதேவரிடம் அன்பு கொள்ளுபவர்களைப்போலவே-"ஆன்மிக லாபம்" கருதிஅதை எதிர்பார்த்து அன்பு செய்பவர்கள்கூட ஒரு பலனை எதிர் பார்த்துதான் செய்கிறார்கள்! "அதுவும் ஓர் ஆசைதான்" ஆனால் முன்னால் சொன்னதற்கும் - பின்னால் சொல்லப்பட்டதற்கும் "தரத்தில்" வித்தியாசமிருக்கின்றது!

ஞான அடைவுக்கு — ஆசையை அறவே விட்டுவிட வேண்டுமென்பது மிகவும் முக்கியமானதுதான்! ஆனால் மன அடக்கம் ஏற்பட்டு - புலன்களின் அடக்கமும் சித்திக்கும் வரையில்-மனத்தில் ஏதாவது ஒரு வகையில் ஆசை இருந்து கொண்டுதானிருக்கும்! மிக மேலான ஆன்மீக நிலை பெற்றவர் களுக்குக் கூட கடவுளிடத்திலோ - அல்லது குருவினி டத்திலோ ஒரு வகையில் பற்று அல்லது பிடிப்பான அன்பு இருந்து கொண்டுதானிருக்கும்! இறுதியில் - அதையும் அவர்கள் விட்டுவிடுவார்கள்! - விட்டுவிடவும் வேண்டும்!!

அது பற்றித்தான்! " ஆசையறுமின்காள்! ஆசையறு மின்காள்! ஈசனோடாயினும் ஆசையறுமின்காள்!! — என்று ஆன்றோர்கள் கூறியுள்ளனர்!!

எனினும்-சாதாரண நிலையிலுள்ள நம் - போன்ற இலௌகீக ஈடுபாடு கொண்டுள்ள மக்களுக்கு - "ஆசை" இருக்கத்தான் செய்யும்! அது இயல்பே! ஆனால் அந்த ஆசை "பேராசை" ஆக இருக்கலாகாது! நமது தகுதிக்கொத்த நியாய மான ஆசைகளாகவும், பிறருக்கு இன்னல் விளைவிக்கப் கூடாததாகவுமிருக்க வேண்டும்! அவ்வாறிருந்தரல்— இறை யருளாலும் - குருவருளாலும், - அவரவர்களின் எண்ணங் களின் வலுவுக்கும்-நேர்மைக்கும் தக்கபடி, அவை பலிதமாகிக் பயன் தரும்.

இது உண்மையாயினும்– "ஆசையை அறவே விட்டுவிட வேண்டு மென்பதே எல்லோருடைய குறிக்கோளாகவுமிருக்க வேண்டும்!" அந்த வகையில் நமது மனத்தைப் பழக்கப்படுத்தியும் வர வேண்டும்! ஏனெனில் - மனத்தினூடே கலந்திருந்துதான்-ஆசைகள் நம்மை ஆட்டி வைக்கின்றன! மனம் அடங்கினால்-ஆசையும் அடங்கி விடும்!

(12)

அன்பு அல்லது பக்தி என்பது கோபம், மோகம் ஆகியவைகளைப்போல உணர்ச்சியின் பாற்பட்டதே ஆகும்! அன்பு அல்லது பக்தி உணர்ச்சிகளுள் ஒன்று என்றாலும்- ஏனைய உணர்ச்சிகளை விட அது தன்மையில் வேறுபட்டது! உணர்ச்சிகளை நல்ல வழிகளில் திருப்பிவிட்டால் - நல்ல பயன்களைத்தரும்! தீய வழிகளில் செலுத்தினால் - தீமையை விளைவிக்கும். இந்த முறையை அனுசரித்து நமது அன்புணர்ச்சியை கடவுளிடத்திலும், குரு தேவரிடத்திலும் செலுத்தி - நற்பலன்களை நாம் நாடினால்- அவற்றை நிச்சயமாக அடைதல் கூடும்.

கடவுளிடத்துக் கொள்ளும் அன்பு- "கடவுள் பக்தி" எனப்படும்! குருவினிடத்துக்கொள்ளும் அன்பு. குருபக்தி என்ற பெயர் பெறும்! இரண்டுமே ஒருதன்மையானவைகள் தாம்! நற்பலன்களையும் அவையளிக்கக் கூடியவைதாம்! இவ்விதமான— "பக்தி உணர்வை" க்கொள்ளுவதன் மூலம் "ஞான அடைவு" எளிதாகும் என்பர் பெரியோர்! பக்குவமான மனமும் - ஆராய்ச்சியறிவும் பெற்றவர்களுக்கு மனோ சாதனத்தினாலும்-விசார ஞானத்தினாலும் "ஞான விளக்கம்" ஏற்படுவது சாத்தியமாகயிருக்கலாம்!! ஆனால்-சாதாரண நிலையிலுள்ள மக்களுக்கு- பக்திசெய்வதே முக்திக்கு வழிகாட்டு வதாக யிருக்கும்!! இதுபற்றித்தான் — "பக்தியின்றேல் ஞானமில்லை.—ஞானமின்றேல் முக்தியில்லை" என்று ஆதிசங்கர பகவத்பாதாள் தமது 'பஜகோவிந்தம்" என்ற நூலில் கூறி யுள்ளார்கள்!! இந்த பக்தி மார்க்கத்திலே "குருபக்தி" மிகவும் விசேஷமானது என்பது ஆன்றோர் கருத்து!!

குருவினிடத்திலே-பக்தி கொண்டு வழிபாடு செய் பவர்கள் எவ்வாறு அதனைச் செய்து நலம் பெறுவது என்பது அடுத்து கவனிக்க வேண்டியதாகும். வழிபாட்டு முறைகளிலே பலவிதங்களுண்டு! சிலர் குருவினுடைய உருவத்தைப் பார்த்து வணங்கிவழிபடுகின்றார்கள்! சிலர் அவர் உருவத்தை மனத்தால் நினைத்து வழிபடுகின்றார்கள். இவ்வகைகளில் மனம், மொழி, மெய் ஆகியவை மூன்றும் சேர்ந்து வழிபாடு நடத்தப்படுகின்றது! சிலபக்தர்கள்-குருவினுடைய பாதுகை களை வைத்து-ஆகம முறைப்படியோ அல்லது வைதீக முறைப்படியோ வழிபாடு நடத்துகின்றார்கள்! சிலர் மான சீகமாக குருவடிகளை இதயஸ்தானத்தில் வைத்து தியானித்து நல்லருள் பெறுன்கிறார்கள்! இவ்வாறு-பல வழிபாட்டு முறை களிருக்கின்றன! இவைகளில்·அவரவர்கள் சொகரியத்துக்கு ஒத்ததான வழிகளைக்கைக் கொண்டு குரு வழிபாடு நடத்

தலாம்! சாதாரணமாக-மக்கள் கடவுளை மனமுருகிப் போற்றி வணங்கி வழிபடுவதைப் போல-குரு பிரானிடத்தும் மனதார அன்பு செலுத்தி, உளங்கனிந்து போற்றி வணங்கி வேண்டி வந்தால்-அவர்கள் நற்பலன்களடைவது திண்ணமாகும்!!

அவ்வாறு செய்வதற்கு-நமதுமக்களுக்கு குருவினிடம் மனம் நிறைந்த உள்ளன்பும், அவர் பால் ஐயத்துக்கிடமில்லாத படி திடமான நம்பிக்கையும் இருக்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்!!

திருவடி தியானத்தைப்பற்றி-மேலே ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது! அது மானசீக வழிபாடு செய்பவர்களுக்கு ஏற்றதாகும்! ஆகையால் அதனை இங்கு விவரிப்பது அவசியமல்ல! சமயம் நேரும்போது அதை ஆராய்ந்து தெரிந்துகொள்ளலாம்.

குரு பெருமானை-நேரே தரிசிப்பதற்கு வாய்ப்பில்லாத போதும்-அல்லது குருதேவர் தூல உடலை நீத்து மறைந்து விட்ட நிலையிலும்-குருவைப்போற்றி வழிபட விரும்புபவர்கள் அவர்களது "திருவுருவப்படத்தை" இல்லங்களில் வைத்து ஆராதித்துப் போற்றிப் பணிந்து வழிபடலாம்! அல்லது அவர்களது "சமாதிக்கோவிலுக்கு"ச் சென்று போற்றிப் பணிந்து வழிபட்டும் நன்மையடையலாம்!! "குரு பக்தியை" எந்தவகையில் செய்தாலும்—அது வழிபடக்கூடியவர்களுடைய "மனஉருக்கத்திற்கும்—நம்பிக்கைக்கும்" தக்கபடி நற்பலன்களையளிக்கும்!!

ஆகையால்-குருதேவரிடத்தில் அன்பு செலுத்தி-எம்முறைபற்றியாவது அவர்களை வழிபட்டு வணங்கிவந்தால் நாம் வேண்டிய நன்மைகளைப் பெற்று நல்வாழ்வடையலாம்.

நமது குருதேவரை-நேரில் தரிசிக்கப் பாக்கியம் பெற்றவர்களை நல்லதிருஷ்டம் உடையவர்கள் என்றே சொல்ல வேண்டும்! அத்தகையோர் குருதேவரின் "திருஉருவை" இயன்றவரையில் "மனத்தில்பாவித்து" வணங்கிவழிபட முயற்சி செய்வார்களாக! அதன் மூலமாக-அவர்கள் பெரும் பயனை அடைதல் கூடும்! குரு அருள் அவ்வகையிலே அவர்களுக்குத்துணை நிற்குமாக!!

"குருபக்தி" அல்லது "கடவுட்பக்தி" செய்யக்கூடிய பக்தர்கள் கூடியவரையில் நல்ல நினைப்பு, நல்ல பேச்சு, நல்ல செயல் ஆகியவற்றைக்கைக்கொண்டு தூய்மையான வாழ்க்கையை நடத்திப் பிறருக்கும் தீங்கு செய்யாமலிருப்பார்களானால், "அவர்கள் இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் மேலான நல்வாழ்வு பெறலாம்" என்பது பெரியோரது கருத்தாகும்.!

அடியேனது பாக்கியவசமாக அடியேனுக்குக் கிடைத்துள்ள "குருஅருள்" எல்லா மக்களுக்கும் கிடைத்து அவர்கள் நற்பேறு பெறவேண்டுமேன்பதே-அடியேனது பிரார்த்தனை. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று போற்றிப் பணிந்து · குரு தேவர்திருவடிகளைச் சிந்தித்திருப்போமாக! குருவாழ்க! குருவே துணை!!

"நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை!"

எல்லோரும் நன்றாக இருக்கவேண்டும்! அதற்கு ஈசன் கணேசன் துணை செய்யவேண்டும்!!

முற்றும்

சத்குரு–நாமாவளி

"ரகுபதி ராகவ ராஜாராம்"—என்ற மெட்டு

(1) ஞானனந்தநாதா—குருபர
ஞானனந்த — சத்குருநாதா,
ஞானனந்தாஞான — தபோவன
நாதா சத்குரு — ஞானனந்தா,
— (ஞான)

(2) சரணம் சரணம் — சரணம் சத்குரு
சஞ்சலம் தீர்த்தெமை — ஆண்டிடுவீரே
கரணம் கருவிகள் ஓய்ந்து — துதித்திடக்
கருணை புரிவீர் — கதிவேரிலைஇனி,
— (ஞான)

(3) ஈனக்கவலைகள் — ஒழித்திடுவீரே
இதயத்தில் அமைதியைக் — நாட்டிடுவீரே
ஊனம் தருமச்சத்தை — ஓட்டிடுவீரே
உள்ளந்தனிலே இன்பம் — கூட்டிடுவீரே
— (ஞான)

(4) பிறவிப் பிணிதன்னை — மாற்றிடுவீரே,
"பேரின்ப நிலைபெற" — வரமருள்வீரே,
தரமிக்க செயல்களைப் — புரிந்துமே நாங்கள்
சன்மார்க்கமாய் வாழத் — தயவு செய்வீரே,
— (ஞான)

குரு மொழி

வெட்டாத சச்கரம் — பேசாத மந்திரம், இன்னொருவருக்கு
எட்டாத புட்பம் — இரையாத தீர்த்தம், இனி முடிந்து
கட்டாதலிங்கம் — கருத்தினுள்ளே
முட்டாத பூஜையன்றோ — குருநாதன் மொழிந்ததுவே''

—ஸ்ரீ பட்டினத்தடிகள்.

ஞான அனுபவம்

“பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச்சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத்தொடர்ந்தேசிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே”

— மாணிக்கவாசகப்பெருமான்

பொன் மொழிகள்

உணர்ந்து ஒழுகினுல் — உயர்வடைவாய்!

உன்மனத்திற்கு நீ அடிமையானுல் — உலகத்திற்கு நீ அடிமையாவாய்

உன்மனம் உனக்கு அடங்கினுல்— உலகம் உனக்கு அடங்கும்!

உன்னைபிறர் நேசிக்கவேண்டுமானுல் — நீபிறரை நேசிக்கவேண்டும்

உன்னிடத்தில் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கின்ருயோ — அப்படியே நீ பிறரிடத்தில் நடந்துகொள்வாயாக!!

மறத்தை விடு!

அறத்தை நாடு!

பயனடைவாய்!

நீ கடவுளை உணர வேண்டுமா?

அன்பாயிரு!!

உண்மையைச் சொல்!!

அறிவாளியாய்யிரு!

ஆண்மையோடிரு!!

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.